**செய்தி வெளியீடு எண்:267** **நாள்:12.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் காவிரி டெல்டா பகுதி விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்தார்கள்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து இன்று (12.06.2021) தண்ணீர் திறந்தார்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி செய்ய பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15–ஆம் தேதி வரை 125 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்காக மேட்டூர் அணையிலிருந்து 99.74 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25.26 டி.எம்.சி தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாக பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு ஜூன் 12–ஆம் தேதி 3,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு, வரும் மாதங்களில் தேவைக்கேற்ப நீர் வழங்கப்படும்.

12,10,000 ஏக்கர் பரப்பளவில் சம்பா மற்றும் தாளடி பாசனம் செய்ய செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 205.60 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மேட்டூர் அணையிலிருந்து 108.50 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும், மீதமுள்ள 97.10 டி.எம்.சி தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் காலங்களில், அணையின் மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், என மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் கீழ் பகுதியில் 7 கதவணை நீர்மின் நிலையங்கள் மூலம் தலா 30 மெகாவாட் என மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி

செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவ மழையினை பொறுத்து அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும், குறைத்தும் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தியும், நீர்ப்பங்கீட்டில் நிலைமைக்கேற்ப தண்ணீரை முறைவைத்து பயன்படுத்தவும், நீர்வளத் துறை அலுவலர்களுடன் ஒத்துழைப்பு நல்கியும், வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களின் ஆலோசனைகளைப் பெற்று, செம்மை நெல் சாகுபடி உள்ளிட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறைந்த பரப்பளவில் மிக அதிக அளவு மகசூல் பெற்று பயனடைய வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நிகழ்வில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ். சிவசங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர். பார்த்திபன், டாக்டர் பொன். கௌதம் சிகாமணி, டாக்டர் செ. செந்தில் குமார் மற்றும் திரு. ஏ.கே.பி. சின்ராஜ், அரசு தலைமைக் கொறடா திரு. கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. உதயநிதி ஸ்டாலின், திரு. இரா. இராஜேந்திரன் மற்றும் திரு. எஸ். சதாசிவம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. செ. கார்மேகம் இ.ஆ.ப., நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. இராமமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், விவசாய பெருமக்கள் கலந்துகொண்டனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**